**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்**

**தேதி 21.12.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

அசாம் மாநிலம், திப்ருகார் மாவட்டத்தில் உள்ள, நம்ரூப்பில், 10 ஆயிரத்து 601 கோடி ரூபாய் மதிப்பிலான உரத் தொழிற்சாலைக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று அடிக்கல் நாட்டினார்.

உலக தியான தினத்தை ஒட்டி, ஹைதராபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசுத் துணைத் தலைவர் திரு.சிபி ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார்.

ஞாயிற்றுக் கிழமைகளில் சைக்கிள் ஓட்டுவோம் இயக்கத்தின் முதலாமாண்டு நிறைவு விழாவை, புதுச்சேரியில், மத்திய விளையாட்டு துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, முதலமைச்சர் ரங்கசாமியுடன் இணைந்து தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, போலியோ சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாம் இன்று நடைபெற்றது.

-------------------------

*மோடி-அசாம் (4)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அசாம் மாநிலம், திப்ருகார் மாவட்டத்தில் உள்ள, நம்ரூப்பில், 10 ஆயிரத்து 601 கோடி ரூபாய் மதிப்பிலான உரத் தொழிற்சாலைக்கு இன்று அடிக்கல் நாட்டினார். இதுகுறித்த கூடுதல் தகவல்கள்....

*மோடி-அசாம் 2 (13)*

<u>இத்திட்டம் உர உற்பத்தியை வலுப்படுத்தவும், பிராந்தியத்தில் விவசாய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதையும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த ஆலை, ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் யூரியா உற்பத்தி திறன் கொண்டதாக இருக்கும். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்த ஆலை, அசாம் மாநிலத்தின் உரத் தேவையை பூர்த்தி</u>

செய்வதோடு, அண்டை மாநிலங்களுக்கு தேவையான உரத்தையும், வழங்கும என கூறினார். மேலும் இந்த ஆலை கணிசமான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் அவர் கூறினார். முன்னதாக அவர் இன்று, அசாம் மாநிலம் குவஹாத்தியில் உள்ள பஸ்சிம் போராகானில் உள்ள ஸ்வாஹித் ஸ்மார்க் க்ஷேத்ராவிற்கு சென்று, அசாம் இயக்கத்தின் தியாகிகளுக்கு அவர் அஞ்சலி செலுத்தினார். பின்னர் நடைபெறும் நிகழ்ச்சியில், பரிக்க்ஷா பே சர்ச்சா திட்டத்தின் ஒருபகுதியாக, அசாம் மாநிலத்தின் சிறந்த மாணவர்களுடன் அவர் உரையாடல் நடத்தினார்.

-------------------------

சி.பி ராதாகிருஷ்ணன் 1 (6)

உலக தியான தினம் இன்று கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பொது சபை, கடந்த ஆண்டு டிசம்பர் 21ஆம் தேதியை, உலக தியான தினமாக அறிவித்தது. இந்நாளையொட்டி, ஹைதராபாத் கன்ஹா சாந்தி வனத்தில் நடைபெறும் தியான நிகழ்ச்சியில், குடியரசுத் துணைத் தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பங்கேற்கிறார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

சி.பி ராதாகிருஷ்ணன் 2 (18)

உலக தியான தினம் என்பது, தியானத்தின் மகத்துவத்தை குறிப்பதாகவும், மன ஆராக்கியம் மற்றும், உலக அமைதி ஆகியவற்றை நினைவு கூறும் ஒரு நாளாகவும் கருதப்படுகிறது. இந்தியாவின் ஆன்மீக குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர், நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில், உலக அமைதி, மற்றும், நல்லிணக்கத்திற்கான தியானம் என்ற தலைப்பில், நிகழ்ச்சியை நடத்தினார். போர்க்களத்தில், தியானம், மற்றும், யோகா பயிற்சி செய்ய அர்ஜூனனுக்கு கிருஷ்ணர் விடுத்த அழைப்பை நினைவு கூர்ந்த அவர், மனித வாழ்க்கையும் ஒரு போர்களமாக மாறி விட்டதாக கூறினார். இன்று பல்வேறு கவலைகள் மக்களை கவலை அடைய செய்கின்றன. கிருஷ்ணர் வழங்கிய அறிவுரையை உதாரணமாக கொண்டு, உக்ரைனில் நடந்த போரில், 8 ஆயிரம் மக்கள், இருள் மற்றும் விரக்தியின் வழியாக போராடினர். ஆனால் தியானம் அவர்களுக்கு மன அமைதியை கொடுத்தது என்று கூறினார். உலகில் அமைதியை நிலை நாட்டுவதை நோக்குமாக கொண்ட தியான நிகழ்ச்சியில், ராஜதந்திரிகள், ஐநா அதிகாரிகள், யோகத் தலைவர்கள் பங்கேற்றனர். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 21 தேதியை உலக தியான தினமாக ஐநா அறிவித்து இருந்தது. இது

இன்று மெக்சிகோ, நேபாளம், மற்றும் இலங்கையில் கொண்டாடப் படுகிறது.

-------------------------

*ஷிவ்ராஜ் சிங் சவுகான்* (12)

போலி உரம் மற்றும் பூச்சிக் கொல்லி விற்பனைக்கு எதிரான மசோதா, விவசாயிகளுக்கு பயன் அளிப்பதுடன், ஒவ்வொரு அம்சத்தின் வளர்ச்சிக்கும், முன்னுரிமை அளிக்கும் என்று, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார். புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வரும் ஆண்டுக்கான பட்ஜெட்டில், வேளாண் துறைக்கு தேவையான அறிவிப்புகளை அறிவிக்க உள்ளதாக அவர் தெரிவித்தார். வேளாண் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவது தொடர்பாக, விவசாயிகளின் முகவர்கள், வேளாண் வல்லுனர்களுடன் ஒருங்கிணைந்து, சிந்தனை அரங்கம் நடத்த உள்ளதாக, அவர் தெரிவித்தார். மேலும வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஜி ராம் ஜி மசோதா ஊரக மக்களுக்கான 100 நாள் வேலைத் திட்டத்தை 125 நாட்களாக அதிகரிக்கும் என்றும் திரு. சவுகான் தெரிவித்தார்.

-------------------------

*மன் கீ பாத்* (5)

ஆகாஷ்வாணியில் இம்மாதம் 28ஆம் தேதி ஒலிபரப்பாக உள்ள 129ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து, பொது மக்கள் தங்கள் கருத்துக்களை வருகிற 26ஆம் தேதி வரை நமோ செயலி, மை கவ் இணைய தளம் ஆகியவற்றின் மூலம் தெரிவிக்கலாம் என, பிரதமர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

*ரயில் கட்டணம்* (11)

நாட்டில் மேம்பட்ட ரயில் சேவை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய, மனித ஆற்றல் அவசியம் என, மத்திய ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. மனித ஆற்றலின் தேவைகளை ஈடுசெய்ய, வரும் 26ஆம் தேதி முதல், 600 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்படும் என அமைச்கம் தெரிவித்துள்ளது. இதன்படி, நாடு முழுவதும் 215 கிலோ மீட்டர் தொலைவிற்கு, அதிகமான ரயில் பயண கட்டணங்கள் மாற்றி அமைக்கப் பட்டுள்ளதாக, ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதனையடுத்து, சாதாரண வகுப்பு ரயில் கட்டணம், கிலோ மீட்டருக்கு 1 பைசாவும்,

குளிர்சாதன வகுப்பிற்கான கட்டணம், கிலோ மீட்டருக்கு 2 பைசாவும், அதிகரிக்கப் பட்டுள்ளது. மாற்றி அமைக்கப்பட்ட இந்த கட்டணம் வரும் 26ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

-------------------------

*புதுச்சேரி-சைக்கிள் (17)*

புதுச்சேரி ராக் கடற்கரையில், Fit india இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற, ஞாயிற்றுக் கிழமைகளில் சைக்கிள் ஓட்டுவோம் நிகழ்ச்சியின் முதலாமாண்டு நிறைவு நாள் விழாவை, மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவுடன் இணைந்து, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கொடிசைத்து தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சௌகான் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பிட் இண்டியா செயலி மூலம் அதிக தூரம் சைக்கிள் ஒட்டி, அதிக புள்ளிகள் பெற்ற முதல் 3 பேருக்கு, டாக்டர் மன்சுக் மாண்டவியா, மிதி வண்டிகளை வழங்கி கவுரவித்தார். பின்னர் பேசிய அவர், கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு இந்த இயக்கம், இந்தியாவின் மிகப் பெரிய உடற்பயிற்சி இயக்கமாக உருவானது என்றும், இது நாடு முழுவதும் கிராமங்கள், நகரங்கள், மாவட்டங்கள் தோறும் பரவி உள்ளதாக தெரிவித்தார். ஞாயிற்றுக் கிழமைகளில் சைக்கிள் ஓட்டுவோம் என்ற இந்த இயக்கம், பிரதமர் திரு. நரேநதிர மோடியின் தொலைநோக்குப் பார்வையில் அமைந்தது என்றும் அவர் கூறினார்.

-------------------------

*ரங்கசாமி- கூட்டம்* (13)

2 நாள் பயணமாக புதுச்சேரிக் வருகை புரிந்த பிஜேபி தேசிய செயல் தலைவர் திரு. நிதின் நிபின், மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, மேலிட பொறுப்பாளர் திரு. நிர்மல் குமார் சுரானா ஆகியோர், இன்று மதியம் முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, அவரது இல்லத்தில் சந்தித்து பேசினர். தொடர்ந்து முதலமைச்சர் வீடு அருகே உள்ள அப்பா பைத்தியசாமி கோவிலில் சுவாமி தரிசனம் செய்த அவர்களுக்கு இனிப்புகளையும் முதலமைச்சர் வழங்கினார். இதனையடுத்து முதலமைச்சர் இல்லத்தில் அமர்ந்து, ஆலாசனை கூட்டம் நடத்தினர். பின்னர் செய்தியாளர்களிடம்

பேசிய முதலமைச்சர், மாநில வளர்ச்சி குறித்து, கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்ததாக கூறினார். வருகிற சட்டமன்றத் தேர்தலில், ஒன்றாக இணைந்து பணியாற்றுவோம் என்றும், முதலமைச்சர் தெரிவித்தார்.

-------------------------

போலியோ சொட்டு மருந்து (10)

புதுச்சேரியில், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, போலியோ சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாம், இன்று நடைபெற்றது. இம்முகாமினை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கலந்து கொண்டு தொடக்கி வைத்தார். புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ள அனைத்து கிராமம் மற்றும் நகரப் பகுதிகளிலும், அமைக்கப்பட்டுள்ள 425 முகாம்களில், காலை 7 மணி முதல், பிற்பகல் 3 மணி வரை, போலியோ சொட்டு மருந்துகள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான, பேருந்து நிலையம், ரயில் நிலையம், பூங்காக்கள், கோவில்கள், மற்றும் வணிக வளாகங்கள் உள்ளிட்ட 31 இடங்களிலும், இந்த முகாம்கள் நடைபெற்றன. இதன்மூலம், சுமார் 74 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பயன்பெற்றனர்.

-------------------------

காரைக்கால்-போலியோ (10)

காரைக்காலில், இன்று நடைபெற்ற போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமினை, அம்மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.எஸ்.பி.எஸ் ரவிபிரகாஷ் தொடக்கி வைத்தார். காரைக்கால் மாவட்டம முழுவதும் சுமார் 11 ஆயிரத்து 780 குழந்தைகளுக்கு இந்த போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது. விடுபட்ட குழந்தைகளுக்கு நாளையும், நாளை மறுதினமும், அவரவர் இல்லந் தேடி சுகாதார பணியாளர்கள் மூலம் சொட்டு மருந்துகள் வழங்கப்பட உள்ளன. இந்த முகாமில் நலவழித்துறை துணை இயக்குநர் டாக்டர் சிவராஜ்குமார், காரைக்கால் அரசு மருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் கண்ணகி, மருத்துவ அதிகாரி டாக்டர் உமா மகேஸ்வரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

-------------------------

*எஸ்ஐஆர் (11)*

புதுச்சேரியில் அனைத்து பகுதிகளிலும் உள்ள வாக்குச் சாவடிகளில், 2ஆவது நாளாக, வாக்காளர் சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. புதுச்சேரியில் வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 19ஆம் தேதி வெளியிடப்பட்ட நிலையில், இந்த வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டவர்கள், தங்களது பெயரை சேர்க்க சிறப்பு வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது. இந்த சிறப்பு முகாமில், வாக்காளர் பெயர் சேர்க்கை, திருத்தம், மற்றும் மரபு தொடர்பான பணிகளை, ஜனவரி மாதம் 18ஆம் தேதி வரை மேற்கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. எனினும், தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ மையம், இணைய தளம் மூலமாகவும், ஆன்-லைன் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

-------------------------

*இஸ்ரோ (7)*

இஸ்ரோவின் ககன்யான் திட்டத்திற்காக, விண்வெளிக்கு சென்று, பூமிக்கு திரும்பும் வீரர்களை விண்கலம் பாதுகாப்பாக, இறக்குவதை உறுதி செய்யும் வகையில் நடத்தப்பட்ட பாரசூட் சோதனை, வெற்றிகரமாக முடிக்கப்பட்டதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. இதுகுறித்து தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள மத்திய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், இந்தியாவின் முதல் மனித விண்வெளி பயணமான ககன்யான் திட்டத்தை நோக்கி, மேலும் ஒருபடி முன்னேறி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

அசாம் மாநிலம், திப்ருகார் மாவட்டத்தில் உள்ள, நம்ரூப்பில், 10 ஆயிரத்து 601 கோடி ரூபாய் மதிப்பிலான உரத் தொழிற்சாலைக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று அடிக்கல் நாட்டினார்.

உலக தியான தினத்தை ஒட்டி, ஹைதராபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசுத் துணைத் தலைவர் திரு.சிபி ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார்.

ஞாயிற்றுக் கிழமைகளில் சைக்கிள் ஓட்டுவோம் இயக்கத்தின் முதலாமாண்டு நிறைவு விழாவை, புதுச்சேரியில், மத்திய விளையாட்டு துறை அமைச்சர்

திரு. மன்சுக் மாண்டவியா, முதலமைச்சர் ரங்கசாமியுடன் இணைந்து தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, போலியோ சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாம் இன்று நடைபெற்றது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**